# அந்நிய பாஷை



**<u>அந்நிய பாஷை பேசுகிறவர்களுடன் கேட்க வேண்டிய கேள்வி</u>**

- நீங்கள் பேசுவது அந்நிய பாஷை தானா ? அப்படியானால் அந்த பாஷையை நீங்கள் பேசுகிறீர்களா (அல்லது) ஆவியானவர் உங்களை பேச வைக்கிறாரா ? அதற்கு அர்த்தம் உண்டா ?

**அந்நிய பாஷை வரம், அந்த வரமும் எல்லாருக்கும் கொடுக்கப்பட்டதல்ல.**

- தனிப்பட்டவரின் பிரயோஜனத்துக்காக அல்ல 1 கொரி 12:7
- பொது பிரயோஜனத்துக்காக அளிக்கப்பட்டுள்ளது. 1 கொரி 12:10 (1 கொரி 12, 13, 14) அந்நிய பாஷை வரம்
- வரங்களின் பட்டியல் ரோமர் 12 (6–8), எபே 4 (11–13), 1 பேது 4 (10–11) இதில் அந்நிய பாஷை இல்லை. 1 கொரி 12:7–11, 28–30
- பாஸ்டருக்கு வல்லமை இல்லை ,பரிசுத்த ஆவி இல்லை என்று சபை விசுவாசிகள் தங்களைப் பற்றி கூறி விடுவார்களோ ? என்று பயந்து தாங்களும் மற்றவர்கள் முன்பாக அந்நியபாஷை பேசுகின்றனர்.
- காத்திருப்பு கூட்டம் (டேரி மீட்டிங்) – அந்நியபாஷை பேசக் கற்றுக் கொள்ள செயற்கை முறையில் அந்நியபாஷை பேச வைப்பார்கள்
- அந்நியபாஷை கற்பிக்கும் முறை ஆவியனாவருக்கு விரோதமானது. அதிவேக பாடல்கள், அதிவேக கைதட்டல்கள்.
- மேலறை அனுபவ நிகழ்ச்சியை தவிர வேத புத்தகத்தில் வெளிப்படுத்தின விசேஷம் வரை ஒரு இடத்திலும் எந்த ஒரு சீஷனும், இயேசு கிறிஸ்து, இயேசுவின் சீஷர்களும் அந்நியபாஷை பேசவில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

- நீங்கள் பேசும் அந்நிய பாஷையை மறுபரிசீலனை செய்து உங்களால் யாரும் கெடுக்கப்படாதபடி, உங்கள் பிள்ளைகள் அந்நியபாஷை பேசி கெட்டுவிடாதபடி காப்பாற்றுங்கள்.
- ஆதி புதிய ஏற்பாடு சபைக்கு வேத புத்தகம் எழுதப்படாத காலத்தில் அந்நிய பாஷை வரமாக கொடுக்கப்பட்டது.
- பரிசுத்த ஆவியின் அடையாளமாக அல்ல.
- அந்நிய பாஷை வரம்
- அந்நிய பாஷை வரமும் சபையில் உள்ள எல்லோராலும் பேசக்கூடியதல்ல.
- எல்லோருக்கும் அந்நியபாஷை வரத்தை கர்த்தர் கொடுக்கவில்லை.

**அப் 1:8 – பரிசுத்த ஆவி வரும் போது சாட்சியாயிருப்பார்கள்**

**வரம் – பொது பிரயோஜனத்திற்காகத் தரப்படுகிறது.**

- எல்லோருக்கும் அன்று அந்நியபாஷை வரம் கொடுக்கப்படவில்லை. 1 கொரி 12:30
- இது வரம், பொது பக்தி விருத்தியைவிட தனிப்பட்ட பக்தி விருத்திக்கே அதிகமாக பயன்பட்டது. 1 கொரி 14:4
- இவ்வரம் ஒழிந்து போகும் 1 கொரி 13:8
- விளக்கம் கூறும் ஆள் இல்லாத போது சபையில் பேசாமல் தனியாக அந்த வரத்தை பயன்படுத்திக் கொள்ள ஆலோசனை கூறினார். 1 கொரி 14:28
- பிறர் நடுவில் ஜெபம் செய்யும் போது பிறருக்கும் புரியும் சாதாரண மொழியில் ஜெபிப்பதே சிறப்பு. 1 கொரி 14:16–19

நம்மைப் போல வேதாகமம் கிடைக்காத தொடக்க காலத்தில் தீர்க்கதரிசன வரத்தைப் போல அந்நியபாஷை வரமும் மக்களுக்கு தேவ ஆலோசனைகளை வழங்கப் பயன்பட்டு வந்தது.

- ஆவியானவர் வேத புத்தகம் இல்லாத அந்த காலகட்ட விசுவாசிகள் தேவனோடு உறவாடும் நல்ல பயனுக்காக அதனை வழங்கியிருந்தார் என்பதே சரியானதாக இருக்க முடியும். 1 கொரி 14:2
- ஆவியானவர் வீணாக எவ்வரத்தையும் வழங்குவதில்லை.
- ஆவியானவரை பெற்றேன் என்பவர் வார்த்தையில் அல்ல, வாழ்வில் காட்ட வேண்டும்.
- எல்லோருக்கும் ஒரேவிதமான வரங்களை நாடுவதும் சபையின் வளர்ச்சிக்கு அல்ல, தளர்ச்சிக்கே உதவும், போட்டிக்கு வழிவகுக்கும், பக்தி விருத்தி அதிகமாகாது.
- ஒன்று போன்ற வரங்கள் போலித்தன்மையாக நிகழ்த்தப்படலாம். 1 கொரி 12:4, 1 கொரி 12:18–20
- வரமிருந்தும் கனியின்றி பயனில்லை. 1 கொரி 13:2
- கனியிருந்து வரமில்லாதிருந்தாலும் பயனுண்டு 1 கொரி 13:13
- ஆவியினாலே எபே 6:18, ரோம 8:16, யூதா 20
- ஆவியோடும் உண்மையோடும் ஜெபி. யோவா 16:24
- அந்நிய பாஷையோடு ஜெபி என்றல்ல.

## அந்நிய பாஷையை விட போதனை வரத்துக்கு முதன்மையிடம். (மொழி வரம்)

- அந்நிய பாஷை பேசிகிறவர்கள் இதை பேசாதவர்களிலும் தாங்கள் சிறந்தவர்களாக பரிசுத்தவான்களாக காட்டிக் கொள்ள விரும்புகிறார்கள்.
- கொரிந்தியர்கள் எல்லாவற்றைக் காட்டிலும் விரும்பித் தேடிய வரம் அந்நிய பாஷைகளைப் பேசுவதாகும்.
- ஆனால் இந்த வரம் மட்டும் தனியாக இருந்தால் அது சபையைக் கட்டியெழுப்ப பக்தி விருத்தி செய்ய உதவாது.
- எல்லா வரங்களிலும் மேன்மையான வரம் தான் அன்பின் வரம்.

  1 கொரி 13 அதி.
- உன்னிடம் அன்பு / உண்மை இல்லையெனில் நீ பேசுவது அந்நிய பாஷை தானா ?
- எல்லா கிறிஸ்தவர்களும் சாட்சிகளாக வாழ அழைக்கப்படுகின்றனர். அப் 1:8

- பொய்யின் ஆவிகளும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் கூட அந்நிய பாஷைகளில் பேசக்கூடும் மற்ற மதங்களைப் பின்பற்றுவோறும் கூட பல பாஷைகளில் பேசியதுண்டு.
- சீஷர்கள் அப் 2:7, பரிசுத்த ஆவியானவர் தாங்கள் முன் ஒரு போதும் பேசியிராத (அ) கற்றிராத அந்நிய மொழிகளில் பேசினர். (அப் 2:7–12)
- அந்நியபாஷை பேசுகிறவர்களின் நோக்கம் என்ன ?

மகிமை தேவனுக்கா ? பேசுகிறவனுக்கா ?

- நான் சக கிறிஸ்தவனைவிட மகிமை அந்நிய பாஷை பேசுவதால் மேலானவன் என்ற எண்ணம்
- அநியாயக்காரர் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை என வேதம் கூறுகிறது.

அந்நியபாஷை பேசாதவர்கள் ராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை என வேதம் கூறவில்லை

- அவர்களுடைய கனிகளாலே / செயல்களினாலே அறிவீர்கள்.
- உனது நம்பிக்கை கிறிஸ்துவின் மீதா ? அந்நிய பாஷையின் மீதா ?
- அந்நிய பாஷையில் பேசினால் சாத்தானுக்கு தெரியாது, புரியாது என்பவர்களே கேளுங்கள்.
- சாத்தானுக்கு உலகில் பேசப்படும் அனைத்து பாஷைகளும் தூதர் பாஷையும் தெரியும். எனவே அவனுக்கு தெரியாமல் நீங்கள் தேவனிடம் பேச முடியாது.
- யோபு – தேவ சந்நிதியில் சாத்தான் இருந்தான்.
- சாத்தானுக்கு தெரிந்தால் என்ன ? தேவன் சர்வ வல்லமை உடையவர். உங்கள் வாழ்வில் அவர் அனுமதியில்லாமல் எதுவும் நடைபெற போவதில்லை, சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது. ரோம 8:28.

Test யாக் 1:17, 3:17

பொய்யாக அந்நியபாஷை பேசுதல்

1 யோவா 4:1 சந்தேகிக்கப்பட முடியாத ஆவியின் கிரியை அல்ல.

- மனுஷனுடைய முயற்சியால் போலியாக அந்நிய பாஷை பேசப்படலாம். (அ) அசுத்த ஆவியின் கிரியையால் அப்படி பேசலாம்.

வேதாகமம்
இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

- எல்லா ஆவிகளையும் நம்பாதேயுங்கள், நமது ஆவிக்குரிய அனுபவம் உண்மையிலேயே தேவனிடமிருந்து வருகிறதா என சோதித்து பார். 1 யோவா 4:1
- இது கற்றுப் பழகும் ஒரு முறை அல்ல, இது விசுவாசிகளுக்கு சம்பந்தமில்லாத சொற்றொடர்களை அடுக்கி பேசும்படி கற்றுக் கொடுக்கும் ஒரு வார்த்தையுமல்ல.

பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட பின் தானாக வெளிவரும் ஒரு நிகழ்ச்சியே அந்நிய பாஷை பேசுதல்

**அந்நிய பாஷையில் பேசும் ஒருவர்**

- கிறிஸ்துவுக்கு தன்னை அர்ப்பணிக்காதவராயும்
- வேதாகமத்தின் அதிகாரத்துக்கு கட்டுப்படாதவராயும்
- தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாதவராயும்

யாக் 3:17

இருப்பாரானால் அது பரிசுத்த ஆவியிடமிருந்து வருவதல்ல. 1 யோவா 3:6–10, 4:1–3, மத் 24:11, 24, யோவா 8:31, கலா 1:9.

வேதாகமம்
இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

- வெறும் அந்நிய பாஷையில் மட்டும் ஜெபிப்பதை மேன்மையானதாக பவுல் கருதவில்லை. 1 கொரி 14:14,15
- அந்நிய பாஷை விசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் அவிசுவாசிகளுக்கு எச்சரிக்கையின் அடையாளமாக இருந்தது. 1 கொரி 4:21, 22
- பிறர் நடுவில் ஜெபம் செய்யும் போது பிறருக்கு புரியும் மொழியில் ஜெபிப்பது சிறந்தது. 1 கொரி 14:16–19
- விளக்கம் கூறும் ஆள் இல்லாதபோது சபையில் பேசாமல் தனியாக அந்த வரத்தை பயன்படுத்திக் கொள்ள ஆலோசனை 1 கொரி 14:28
- இது பொது பக்தி விருத்தியை விட தனிப்பட்ட பக்திவிருத்திக்கே அதிகமாக பயன்பட்டது.

  1 கொரி 14:4

- எல்லோருக்கும் அந்நியபாஷை வரம் கொடுக்கப்படவில்லை. 1 கொரி 12:30
- அந்நிய பாஷை வரம் ஒழிந்து போகும். 1 கொரி 13:8

நம்மை போல முழு வேதாகமம் கிடைக்காத காலத்தில் தீர்க்கதரிசன வரத்தை போல அந்நிய பாஷை வரமும் மக்களுக்கு தேவ ஆலோசனைகளை வழங்க பயன்பட்டு வந்தது. பரிசுத்த ஆவியானவர் வேத புத்தகம் இல்லாத கால கட்டத்தில் விசுவாசிகள் தேவனோடு உறவாடும் நல்ல பயனுக்காக வழங்கியிருந்தார். 1 கொரி 14:2,
முழு வேதாகாமம் நமக்கு கிடைத்த பிறகு அந்நிய பாஷை வரத்தின் பயன் தற்போது எதுவுமில்லை. மேலும் ஆவியானவர் வீணாக எவ்வரத்தையும் வழங்குவதில்லை.

- ஜெபம் ஆவியோடும் கருத்தோடும் பண்ண வேண்டும். 1 கொரி 14:15
- சபையில் எல்லாம் பக்தி விருத்தியை கருத்திற் கொண்டே செய்யப்படக்கடவது
- ஒரு செயலானது உணர்ச்சிபூர்வமானதாக, கவர்ச்சிமிக்கதாக மட்டும் இருந்தால் சபையில் ஏற்றுக் கொள்ளக்கூடாது.
- தேவனுடைய மக்களை கட்டி எழுப்பும் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்
  (பக்தி விருத்தி = ஆவிக்குரிய வளர்ச்சி)
- சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது 1 கொரி 14:40
- எல்லாக் காரியங்களும் ஏற்ற விதத்திலும் ஒழுங்காகவும் செய்யப்பட வேண்டும்.

வேதாகமம் இரட்சிப்பு
நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்